
தலைப்பு:
மற்றொரு
நீண்ட வார
இறுதி அல்ல

**ஈஸ்டர் பலருக்கு மற்றொரு நீண்ட வார இறுதியைப் போலவே இருக்கின்றது.ஆனால் உயிர்த்தெழுதலின் போது நடைபெற்ற சம்பவங்கள் இதுவரை கண்டிராத ஆண்டவரின் அற்புதமான அன்பின் செயலை பிரதிபலிக்கிறது.முதலாம் பெரிய வெள்ளிக்கிழமை அன்று தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார்.**

அப்பொழுது பிலாத்து இயேசுவை சிலுவையில் அறையும்படிக்கு அவர்களிடத்தில் ஒப்புக்கொடுத்தான்.அவர்கள் இயேசுவைப் பிடித்துக் கொண்டு போனார்கள்.அவர் தம்முடைய சிலுவையை சுமந்து கொண்டு,எபிரேயு பாஷையிலே கொல்கொதா என்று சொல்லப்படும் கபாலஸ்தலம் என்கிற இடத்திற்கு புறப்பட்டு போனார்.அங்கே அவரை சிலுவையில் அறைந்தார்கள்......

யோவான் 19:16-18

நூற்றுக்கு அதிபதியும்,அவனோடே கூட இயேசுவை காவல் காத்திருந்தவர்களும், பூமியதிர்ச்சியையும் சம்பவித்த காரியங்களையும் கண்டு,மிகவும் பயந்து:மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன் என்றார்கள்.

மத்தேயு 27:54



**மேலும் இயேசுகிறிஸ்து மரித்து அடக்கம் பண்ணப்பட்டார்.மூன்றாம் நாளிலே அவரது கல்லறை வெறுமையாக அவரைப் பின்பற்றுகிறவர்களால் காணப்பட்டது.**

வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையிலே சூரியன் உதயமாகிறபோது கல்லறையினிடத்தில் வந்து,கல்லறையின் வாசலிலிருக்கிற கல்லை நமக்காக எவன் புரட்டித்தள்ளுவான் என்று ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்டார்கள்.அந்தக் கல் மிகவும் பெரிதாயிருந்தது:அவர்கள் ஏறிட்டுப்பார்க்கிறபோது,அது தள்ளப்பட்டிருக்கக் கண்டார்கள். அவர்கள் கல்லறைக்குள் பிரவேசித்து,வெள்ளையங்கி தரித்தவனாய் வலதுபக்கத்தில் உட்கார்ந்திருந்த வாலிபனைக் கண்டு பயந்தார்கள்.அவன் அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்,சிலுவையில் அறையப்பட்ட நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறீர்கள்; அவர் உயிர்த்தெழுந்தார்; அவர் இங்கேயில்லை: இதோ,அவரை வைத்த இடம்.நீங்கள் அவருடைய சீஷரிடத்திற்கும் பேதுருவினிடத்திற்கும் போய்: உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போகிறார்,அவர் உங்களுக்கு சொன்னபடியே அங்கே அவரைக் காண்பீர்கள் என்று அவர்களுக்கு சொல்லுங்கள் என்றான்.நடுக்கமும் திகிலும் அவர்களைப் பிடித்தபடியால்,அவர்கள் சீக்கிரமாய் வெளியே வந்து,கல்லறையை விட்டு ஓடினார்கள்; அவர்கள் பயந்திருந்தபடியினால் ஒருவருக்கும் ஒன்றும் சொல்லாமற்ப் போனார்கள்.

மாற்கு 16:2-8



## அதன்பிறகு ஜீவனுள்ள இயேசுவோடு பல சாட்சிகள் நடக்கவும் பேசவும் செய்தார்கள்.அவர்களில் ஒருவராகிய பேதுரு சாட்சியாக கூறுவதாவது:

அப்படியிருந்தும், தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின் படியேயும்,அவருடைய முன்னறிவின்படியேயும் ஒப்புக்கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து,அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலைசெய்தீர்கள்.தேவன் அவர்களின் மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து,அவரை எழுப்பினார்; அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக்கூடாதிருந்தது.அந்த இயேசுவை தேவன் எழுப்பினார்; இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம்.

அப் 2:23-24,32



**இயேசுவின் வாழ்க்கை,மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் தேவனின் அன்பின் வெளிப்பாடு ஆகும்.அந்த அன்பின் உச்சகட்டத்திலே வெளிப்பட்ட தியாகத்தின் மூலமாக நாம் கடவுளையும் வாழ்வையும் கண்டடைகிறோம்.**

தேவன்,தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு,அவரைத் தந்தருளி,இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.

யோவான் 3:16,17




ஒருவன் தன் சிநேகிதருக்காகத்
தன் ஜீவனைக் கொடுக்கிற
அன்பிலும் அதிகமான அன்பு
ஒருவரிடத்திலுமில்லை.
யோவான் 15:13

# தியாகங்களிலெல்லாம் பெரிய தியாகத்தையும், இயேசுவின் வெற்றியுள்ள உயிர்த்தெழுதலையும் நினைவுகூறும் காலமே ஈஸ்டர்.

---

அன்புள்ள ஆண்டவரே,
உமது திருமைந்தனாகிய இயேசு என்னும் அற்புதமான பரிசுக்காகவும், ஈஸ்டரில் இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் மூலமாக நாங்கள் கொண்டாடி அனுபவிக்கும் புது வாழ்வு என்னும் பரிசுக்காகவும் உமக்கு நன்றி. ஆமென்.

---

இயேசு கிறிஸ்துவைப்பற்றி நீங்கள் மேலும் அறிய விரும்பினால் உங்களுக்கு அருகாமையிலுள்ள தேவாலயத்தை அணுகுங்கள்.

**Distributed by:**

Church Stamp / Address

新加坡
圣经公会
THE BIBLE SOCIETY
OF SINGAPORE

7 Armenian Street, Bible House, Singapore 179932
Tel: (65) 6337 3222
Email: selection@bible.org.sg Website: www.bible.org.sg

For free additional copies, please contact Publishing department (ext 143 / 145)

BSS 2015 10M ISBN 978 981 220 519 3 The Bible text is taken from Tamil OV © BSI.